# உலக ஞாயிறு பள்ளி தினம்

நவம்பர் 5 2017

## இறைபற்றில் வளர்த்தல்

**(குழந்தைகள் ஆராதனை நடத்துவார்கள்)**

**குழந்தைகள் மகிழ்ச்சியுடன் தங்களுக்கு பிடித்த பொம்மைகள்/ பழங்கள்/ பரிசுப்பொருட்களைக் கையில் கொண்டு வந்து ஆலயத்தில் பவனியாக சென்று பலிபீடத்தில் படைக்கிறார்கள். நன்றி ஏறெடுத்தல் ஜெபத்திற்கு பிறகு அவர்கள் இந்த பரிசுப் பொருட்களை ஒருவொருக்கொருவர் பரிமாறிக் கொள்ளலாம்.**

**ஆராதனைக்கு அழைப்பு:-**

ஆராதனை நடத்துபவர் (ஆ.ந).

எங்கள் நம்பிக்கையின் தேவனே, நாங்கள் கொண்டாடுகிற இந்த உலக ஞாயிறு பள்ளி தினத்தில் உம்முடைய பிரசன்னத்தை எங்கள் மத்தியில் வாஞ்சிக்கிறோம். உம்முடைய சாயலில் நீர் (எங்களை) குழந்தைகள் மற்றும் பெரியவர்களை உருவாக்கினீர். ஆகவே நாங்கள் உம்மை பிரதிபலிக்கிறோம்.

எங்கள் கடவுளாகிய குமாரனாகிய கிறிஸ்துவே, எங்கள் விசுவாசத்தின் துவக்கமே, உம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் சிறுபிள்ளைகளாகிய எங்களை கிறிஸ்தவ நெறியில் வளர்க்கப்படுவதற்காக நீர் இவ்வுலகத்தில் குழந்தையாக வருவதை தெரிந்துகொண்டீர்.

எங்கள் இறைவனாகிய பரிசுத்த ஆவியானவரே, உடைந்து போன மனுக்குலத்தின்மீதும், உலகத்தின்மீதும் உம்முடைய வார்த்தையினால் கடவுளின் குணமாகுதலை கொண்டு செல்ல, எங்களை பயன்படுத்தி அருளும். இந்த சந்ததியை அன்பினால் கட்டவும் கிருபை செய்யும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான பெற்றோர்களே, நண்பர்களே நாம் இங்கே திரியேக கடவுளின் நாமத்தில் கூடி வந்திருக்கிறோம். குழந்தைகள் கடவுளால் நமக்கு அருளப்பட்ட பரிசு. அவர்களை பொறுப்புடன் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்க்க உறுதியேற்போம். குழந்தைகள் கடவுளின் சாயலை தாங்கி நிற்பவர்கள். அவர்கள் கடவுளின்

ஆளுகையை எளிய வடிவில் காட்டுபவர்கள். கடவுளை தேடும் யாவருக்கும் எளிதாக தென்படுபவர்கள். கடவுளின் திருவுள சித்தத்தை ஒவ்வொரு குழந்தைகளின் வாழ்விலும் சரியாக நிறைவேற்றுவதற்காக பெரியவர்களாகிய நம்மேல் ஆண்டவர் நம்பிக்கை வைத்துள்ளார். நாம் நம்முடைய ஞாயிறு பள்ளியில் குழந்தைகளை ஆண்டவரிடம் கிட்டி சேர்ப்பதற்காகவும், அவர்களை இந்த நாட்டின் பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்கவும் உழைப்போம். நாம் ஆண்டவருடைய சமூகத்தில் தரித்திருந்து அவருடைய வழிநடத்துதலையும் ஞானத்தையும் பெற்று குழந்தைகளுடைய வாழ்வில் இறையரசைக் கட்ட முயற்சிப்போம்.

**மக்கள்:** தாய் தந்தையாகிய கடவுளே, எங்கள் குடும்பத்துக்கும் திருச்சபைக்கும் மிகப்பெரிய கொடையாக குழந்தைகளைத் தந்திருக்கிறீர். நீர் எங்களுக்கு கொடுத்த பொறுப்பை நாங்கள் சரியாக நிறைவேற்ற எங்களைப் பலப்படுத்தும். அவர்களைக் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்க்கவும், இந்த உலகத்தின் சவால்களை மேற்கொள்ளவும் உதவி செய்யும். ஆமென்.

**ஆரம்ப ஜெபம்:** சதாகாலமும் வீற்றிருக்கும் நம்பிக்கை நிறைந்த எங்கள் ஆண்டவரே, உம்முடைய மந்தையிலுள்ள சிறு ஆடுகளாகிய நாங்கள் உம்முடைய பிரசன்னத்தையும், வழிநடத்துதலையும் எங்கள் வாழ்வில் அநுபவித்துள்ளோம். நீர் உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை எங்களை இரட்சிப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் உம்முடைய அன்பினால் எங்களுக்கு தந்தருளினீரே, அந்த அன்புக்கு நாங்கள் என்றென்றும் நன்றி கடன்பட்டுள்ளோம். உம்முடைய வார்த்தையால் எங்களை ஊன்றக் கட்டி, உம்முடைய அன்பின் வடிகாலாக எங்களுடைய நண்பர்களிடமும் குடும்பத்தினரிடமும் வாழ எங்களை பலப்படுத்தியருளும். உம்முடைய அன்பின் ஆவியினால் இந்த பூமியில் நாங்கள் எங்கள் சகோதர சமயத்தை சேர்ந்த அண்டை வீட்டாருடன் சமாதானமாக வாழ கிருபை செய்யும். ஆண்டவரே, நீர் எங்கள் மேல் பொழிந்தருளிய தாலந்துகளுக்காகவும், வரங்களுக்காகவும் மற்றும் நீர் படைத்த உம்முடைய படைப்புகளை நாங்கள் அநுபவிப்பதற்காகவும் முழுமனதோடு உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் சிந்திப்பதிலும், பேசுவதிலும் மற்றும் செய்யும் அனைத்து காரியங்களிலும் உம்முடைய சாயலை பிரதிபலிக்க எங்களுக்கு உதவி புரியும். உம்முடைய நீங்காத பிரசன்னம் மூலம் இந்த ஆராதனை முழுவதும் கடவுள் பிள்ளைகளிடம் எப்படி இடைபடுகிறார் என்றும் புரிந்து கொள்ள கிருபை செய்யும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆமென்.

**குழந்தைகள் சிறப்புப் பாடல் ஒன்று பாடுவார்கள்**

**பாவமன்னிப்பின் ஜெபம்:-**

**ஆ.ந:-** இயேசு சொன்னார்: "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".

**மக்கள்:** எங்கள் அன்பின் தேவனே, நாங்கள் சிறுபிள்ளைகளைப் போல எங்களை மாற்ற மறுத்ததையும், பரலோகராஜ்யத்திற்கு பங்கு உள்ளவர்களாய் இல்லாமல் விலகிச் சென்றதையும் மன்னித்தருளும்.

**ஆ.ந:** இயேசு: "இந்த பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்".

**மக்கள்:** எங்கள் தயவுள்ள கர்த்தாவே, உம்முடைய பார்வையையும் மற்றும் சக மனிதர்களையும் விட்டு விலகியும், உம்முடைய ராஜ்யத்தை விட்டு விலகிச் சென்றதையும் மன்னித்தருளும்.

**ஆ.ந:** "இந்த சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்," என்று இயேசு சொன்னார்.

**மக்கள்:**அங்கிகரிக்கும் ஆண்டவரே, எங்கள் கூடுகையில் இந்த சிறுகுழந்தைகளை ஏற்க மறுத்த தருணங்களையும், வரவேற்க மறுத்ததையும் மன்னித்தருளும்.

**ஆ.ந:** "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்,"என்று இயேசு சொன்னார்.

**மக்கள்:** அளவற்ற அக்கறையுடையவரே, எங்கள் குழந்தைகளுக்கு நாங்கள் இடறலாகவும், ஆவிக்குரிய வழியில் நடத்த தவறியதற்காகவும், அவர்கள் உணர்வுகளை பாதுகாக்க தவறியதற்காகவும் எங்களை மன்னியும்.

**ஆ.ந:** **"**இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்"என்று இயேசு சொன்னார்.

**மக்கள்:** நீதியுள்ள நியாயாதிபதியே, நாங்கள் சிறுவர்களை, அவர்களுடைய ஜாதி, நிறம், அழகு,வயது மற்றும் அறிவு ஆகியவற்றை வைத்து அற்பமாய் எண்ணினதை மன்னியும்.

**ஆ.ந:** இயேசு சொன்னார்: "இவ்விதமாக, இந்த சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப் போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல".

**மக்கள்:** திருச்சித்தத்தின்படி சகலத்தையும் நடப்பிக்கும் ஆண்டவரே, இந்த சமுதாயத்தின் மத்தியில் வாழும் எங்கள் குழந்தைகளை வாழ்வில் பாதுகாக்க இயலாமல் இருந்த தருணத்தையும் குழந்தைகள் விரும்பாத சூழ்நிலையை ஏற்படுத்தியதற்காகவும் மன்னிக்கவும்.

**கடவுளின் மன்னிப்பை அறிவித்தல்:**

சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது, சிறுபிள்ளையைப் போல தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளுகிற எவனும் அதில் பிரவேசிப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நித்திய அன்பிற்கும் , மனதுருக்கத்திற்கும் (ஆண்டவரானவர்) தேவனானவர், நம்மை (தேவனுடைய அன்பை) சுற்றியுள்ள அனைவருக்கும் விசேஷமாக சிறுபிள்ளைகளுக்கும் எடுத்துச் செல்லும் வாய்க்கால்களாகிய நமக்கு சமாதானத்தையும், மன்னிப்பையும் அருள்செய்வாராக, ஆமென்,

**நன்றி, துதி ஸ்தோத்திர ஜெபம் :**

சர்வவல்லமையுள்ள தேவனே உம்மை வணங்குகிறோம். உம்முடைய திவ்விய கிருபையிலே, எங்களை, உம்முடைய மகிமையையும், நன்மையையும் பிரதிபலிப்பதற்காக, உம்முடைய சாயலாகவே உருவாக்கினீர், சகல துதிக்கும், கனத்திற்கும் பாத்திர் ஆனீரே (ஆளும் கடவுளை சிறு பிள்ளைக்கு) ஒப்புமையாக்கி, சகல துதிக்கும், கனத்துக்கும் உரியவர் ஆனீர், மனிதர்களை சிறுபிள்ளைகளைப் போல மாறும்படியாகக் கூறி, பெரியவர்கள் சிறுபிள்ளைகளின் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் பெரியோர்களின் மத்தியில் உறுதிப்படுத்தினீர், (இச்சிறியரில் ஒருவனுக்கும் இடறல் உண்டாக்காதிருங்கள் என்று எச்சரித்து சிறுபிள்ளைகளின் உரிமைகளை உறுதிப்படுத்தி,) சிறுபிள்ளைகளுக்கு இடறல் உண்டாக்குகிறவர்களை எச்சரித்து, சிறுபிள்ளைகளின் உரிமைகளை உறுதிப்படுத்தினீர், இந்தத் திருச்சபையின் பிள்ளைகளாகிய நாங்கள், எங்கள் திருச்சபையின் போதகர், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள், மூப்பர்கள் மற்றும் பெற்றோர்கள் எங்கள் ஒவ்வொருவர்மேலும் காட்டும், நிபந்தனையில்லா அன்புக்காகவும், அக்கறைக்காகவும் உமக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்,

நாங்கள் மகிழ்வுடன் அனுபவித்து மகிழும் சகலவிதமான நன்மைகளை நினைத்து, அவ்வாறாக தங்கள் வாழ்கையில் அனுபவித்து மகிழ இயலாத மற்ற சிறுபிள்ளைகளையும் எங்கள் ஜெபத்தில் நினைவுகூருகிறோம், உம்முடைய நாமம் எங்கள் வாழ்கையிலும், எங்கள் வாழ்க்கை மூலமாகவும் மகிமைப்படுவதாக ஆமென்,

**(சிறுபிள்ளைகள் தாங்கள் பலிபீடத்தில் வைத்த பரிசுப்பொருட்களை ஒருவருக்கொருவர் பகிரலாம்)**

**சுருக்கஜெபம்** : மகாபெரிய போதகராகிய தேவனே, உமது ஞானத்தினால், உமது மக்களைக் கட்டி எழுப்பி, பாதுகாத்து வருகிறவரே, எங்களை உமது வார்த்தைகளைக் கவனித்துக் கீழ்ப்படிகிறவர்களாக்கி, உம்மில் பலவான்களாக எங்களை வனைந்து, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எங்களுக்குத் தரிப்பித்து, சுவிஷேசத்தின் இரகசியத்தில் தைரியமாக நிலைநிற்கவும், அருள்செய்வதன் மூலம், நாங்கள் உம்முடைய ஞானத்துக்கு எங்களைத் தாழ்த்தி, சிறு பிள்ளைகளைப்போல உம்முடைய வார்த்தையில் போஷிக்கப்பட்டு, இவ்வுலகத்தின் தீமைகளை மேற்கொள்ளவும், உம்மோடும், பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாக ஜீவித்து அரசாளுகிற இயேசு கிறிஸ்துவின் மூலமாக வேண்டிக்கொள்ளுகிறோம் பிதாவே, ஆமென்,

**வேதபாடங்கள்** : (நற்செய்திப் பகுதிகளை ஞாயிறுபள்ளி சிறுபிள்ளைகள் நாடகங்களாக நடித்துக் காட்ட திட்டமிடலாம்)

பழையஏற்பாடு : நீதிமொழிகள் 23:15-26

சங்கீதம் :127

நிருபவாக்கியம் : எபேசியர் 6:10-18

சுவிசேஷ வாக்கியம் : மத்தேயு 18:1-6

பாடல் :

அறிவிப்புகள் :

**சிறப்புப்பாடல் நாடகம் ஞாயிறு பள்ளி பிள்ளைகளின் நிகழ்ச்சி :**

**பிரசங்கம்** : (ஞாயிறு பள்ளி மேல்நிலை மாணவர், ஞாயிறுபள்ளி ஆசிரியர், கிறிஸ்தவ பயிற்சியாளர்)

**விசுவாசப் பிரமாணம் :**

வானத்தையும், பூமியையும் படைத்த, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன், அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன், அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார், பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு பாதாளத்தில் இறங்கினார், மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார், பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய, தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார், அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும், நியாயந்தீர்க்க வருவார், பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேம், பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுததலும், நித்தியஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

**காணிக்கைப் பாடல் :**

**அர்பணிப்பின் செய்கை :-**

சிறுபிள்ளைகளை விசுவாசத்தில் வளர்க்க பெரியவர்களின் அர்பணிப்பை உறுதிசெய்யும் வண்ணமாக ஏதெனும் ஒரு செய்கை (மரக்கன்று நடுதல்,மரக்கன்றுகளை விநியோகித்தல், பகிர்ந்தளித்தல் அல்லது இதைப் போலொத்த ஏதெனும் ஒரு செய்கை)

**லித்தானியா ஜெபம்** : (சிறுபிள்ளைகள் ஒவ்வொரு ஜெப ஆரம்பத்திற்கும் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றலாம்)

**ஆ.ந:** யேகோவாயீரே, அனைவரது தேவைகளையும் அருளுபவரே, வறுமைக்கோட்டில் வாழும் சிறுபிள்ளைகளுக்கு, உணவு, உறைவிடம், கல்வி தந்து உதவுமாறு வேண்டுகிறோம். வறுமை என்பது ஒரு தனிப்பட்ட பாவத்தினால் வராமல், சக மனிதர்களின் தேவைகளை சந்திப்பதற்கு உணர்வில்லாமல் இருப்பதால் வரும் கூட்டான ஒரு செய்கையே. அனைவருக்கும் ஒரு முழுமையான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற நீதியின் தாக்கத்தை எங்கள் சமூகத்தில் கட்டி எழுப்பியருளும்.

**மக்கள்** : கர்த்தாவே உமது கிருபையினால் எங்கள் ஜெபத்தை கேட்டருளும்.

**ஆ.ந:** யேகோவா ஷாலோம் அனைத்து மக்களுக்கும், உலகத்திற்கும் சமாதானம் உறுதிப்படுத்துபவரே, ஆபத்தான சூழ்நிலைகளில் வாழும் பிள்ளைகளின் வாழ்க்கையில் இடைபட்டு அவர்களுடைய தரத்திற்கும், மதிப்பிற்கும் உத்தரவாதம்

பண்ணும்) சமாதானத்தை அவர்களுக்கு அருளுமாறு கெஞ்சுகிறோம். தங்கள் சுயநலத்திற்காக சிறு குழந்தைகளை இழிவான செயல்களான குழந்தைத் தொழிலாளர், சரீர மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பலவிதமான கொடுமைகளைச் செய்யும் நபர்களை எச்சரித்து கண்டித்து, அவர்கள் தங்கள் தீய வழிகளை விட்டு மாறச் செய்தருளும், சிறு பிள்ளைகளின் உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் காரியஸ்தர்களும், குழந்தை உரிமை அமைப்புகளும் உம்முடைய நீதியின் வாய்க்கால்களாக திகழ அவர்களை எழுப்பியருளும்.

**மக்கள்** : கர்த்தாவே உமது கிருபையினால் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்

**ஆ.ந:** யேகோவா ர.்.பா உடைத்த உள்ளங்களை குணமாக்குகிறவரே, போர்களாலும் அகதிகளாக வந்ததினாலும் மற்றும் ஜாதி வகுப்புகளாலும், வயதினாலும், பாலினங்களாலும் மற்றும் பல்வேறு காரணங்களாலும், மனதிலும், சரீரத்திலும் காயப்பட்டவர்கள் மீது உமது குணமாக்கும் தொடுதலை வைக்குமாறு மன்றாடுகிறோம்.

**மக்கள்** : கர்த்தாவே உமது கிருபையினால் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

**ஆ.ந.:**உமது வெற்றிக்கொடியின் கீழ் எங்களை எப்போதும் வெற்றிக்குள்ளாக வழிநடத்தும் யேகோவா நிசியே எங்கள் சிறு நண்பர்கள் அனுதினம் தங்கள் வீடுகளிலும், சமூகத்திலும் சந்திக்கும் எல்லா கசப்பான சம்பவங்களையும் உம்முடைய வல்ல பிரசன்னத்தால் மேற்கொள்ள ஜெபிக்கிறோம். தொடர்ந்து அன்புப்பிள்ளைகளாகிய நாங்கள் உமது கிருபையினால் எல்லா தீமைகளையும் அனுதினமும் வெற்றிகொள்ள கிருபை செய்யும்.

**மக்கள்** : கர்த்தாவே உமது கிருபையினால் எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

**ஆ.ந.:** நாம் அனைவரும் சில விநாடிகள் அமைதியாய் நம் ஞாயிறு பள்ளி பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்களுக்காகவும், குறிப்பாய் ஞாயிறு பள்ளி குழந்தைகளை கடவுளின் கிருபையால் வளர்க்கவும் மனிதர்களின் தயவு பெற்றவர்களாய் மாற்றவும் ஜெபிப்போம்.

நாம் அனைவரும் இணைந்து கர்த்தரின் ஜெபத்தை சொல்வோம்

**முடிவு ஜெபம் மற்றும் ஆசீர்வாதம்** :

எங்களை நேசிக்கும் உயிருள்ள கடவுளே, இந்த ஞாயிறு ஆராதனையை நாங்கள் நடத்த நீர் எங்களை பயன்படுத்தியதற்காக உம்மை நன்றியோடு போற்றுகிறோம். இந்த அருமையான, மேன்மையான ஆசாரிய ஊழியத்தின்

அனுபவத்தை எங்களுக்கு தந்ததற்காய் நன்றி. நாங்கள் உம்மை சார்ந்கவர்கள், நீர் எங்கள் கடவுள். தொடர்ந்து உம்மன்பை இவ்வுடைந்த உலகத்தில் உப்பாய், ஒளியாய் பகிர உதவி செய்யும். ஏங்களை பாதுகாத்துக்கொள்ளும், உம் ஞானத்திலும், பிரியத்திலும் வளரச் செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

**தொடர்ந்து திருவிருந்து ஆராதனை நடைபெறும்.**